**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 11.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 11/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-1 |
| **சாட்சியின் பெயர்** | : | தியாகராஜன் |
| **தந்தை பெயர்** | : | செல்வராஜ் |
| **கிராமம்** | : | நாரணமங்கலம் |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 42 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை மற்றும் கல் அறுக்கும் வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன். ஆஜர் எதிரி வன்னியர் சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். திருமாறன், சுஜைய்காந்த், பிரவீன் குமார் ஆகியோர்களை தெரியும். அவர்கள் எங்கள் ஊரை சேர்ந்தவர்கள் ஆவார்கள். எதிரிக்கு சொந்தமான நிலம் ஒன்று

எங்கள் ஊரான நாரணமங்கலத்தில் உள்ளது. அந்த இடத்தில் எதிரிக்கு செங்கல் கல் அறுக்கு வேலை நான் செய்து வந்தேன். கடந்த 19.05.2023 ஆம் வருடம் கல் அறுக்கும் வேலை செய்தபோது எனக்கும் எதிரிக்கும் பிரச்சனை வந்தது. நான் இந்த பிரச்சனை ஏற்படுவதற்க ஒரு மாதத்திற்கு முன்பாகதான் நான் வேலைக்கு சேர்ந்தேன். 19.05.2023 ம் தேதிக்கு ஒரு வாரத்திற்கு முன்பு செங்கல் அறுக்கும் இடத்தில் மழை பெய்ததன் காரணமாக கல் அறுக்கும் இடத்தில் தண்ணீர் தேங்கி நின்றதால் கல் அறுக்க இயலவில்லை. அதன்பின்னர் எதிரியிடம் எனக்கு தற்போது வேலை இல்லாத காரணத்தினால் மிகவும் சிரமமாக உள்ளதாக கூறி பணம் கடன் கேட்டேன். பணம் இல்லை என்று சொன்னார். பின்னர் நான் என் கணக்கை பார்த்து முடித்து விடுங்கள் நான் வேற இடத்திற்கு வேலைக்கு செல்கிறேன் என்று கேட்டேன். சம்பவ தேதியான 19.05.2023 ஆம் தேதி காலையிலிருந்து பணம் கேட்டுகொண்டிருந்தேன். பணம் இல்லை என்றும், காலவாய் கொல்லைக்கு வா அங்கு வைத்து கணக்கு பார்த்து கொள்ளலாம் என்று சொன்னார். அன்றைய தினம் சுமார் மாலை 05.30 மணியளவில் காலவாய் கொல்லைக்கு போனேன். எதிரி காரில் வந்தார். காலவாய் கொல்லை சாவியை கொடுத்து கேட்டை திறக்க சொன்னார். நான் கேட்டை திறக்க முடியாது என்று சொன்னேன். அப்பொழுது அங்கு எதிரிக்கு தெரிந்த மணி என்ற நபர் இருசக்கர வாகனத்தில் வந்திருந்தார். அவரிடம் எதிரி அருவாளை தீட்டு ஒருவரின் சங்கை அறுக்க வேண்டும் என்று சொன்னார். அப்போது மணி கணக்கை பார்க்கவேண்டும் என்றுதான் சொன்னார். உடனே எதிரி அவரது வாகனத்தில் வைத்திருந்த அருவாளை எடுத்து வீசினார் நான் கீழே குனிந்து கொண்டேன். அப்போது எதிரி என்னடா காசு காசு என்கிறாய் பற புண்ட மவனே செத்த மாடு திங்கிற பயலே என்று சொன்னார். உடனே நான் அங்கிருந்து 500 மீட்டர் தள்ளி தெருவிற்கு ஓடிவிட்டேன். அங்கு ரோட்டில் நின்றுகொண்டிருந்த திருமாறன் என்பவரிடம் சொன்னேன். அதன்பிறகு குடவாசல் காவல் நிலையத்தில் சென்று புகார் கொடுத்தேன். புகாரை நான் தான் எழுதினேன். என்னிடம் காட்டப்படும் புகார் தான் நான் கொடுத்த புகார் ஆகும். இந்த **புகார் அ.சா.ஆ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இந்த இந்நீதிமன்றத்தில் முன்பு வைக்கப்பட்டுள்ள மூன்று அருவாள்களில் என் மீது வீசிய அருவாள் ஆனது இந்நீதிமன்றத்தில் வழக்கு

சொத்து எண். 7/2025 என எண் கொடுக்கப்பட்டுள்ள அருவாள் தான் ஆகும். இந்த **அருவாள் சா.பொ-1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதன் பின்னர் இரண்டு நாட்கள் கழித்து நான் காவல் துணை கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்றேன். அங்கு என்னை விசாரித்தார். நடந்த விபரம் சொன்னேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:</u>**

சாட்சிகள் திருமாறன், பிரவீன்குமார், மூவேந்தன், இளங்கோவன் ஆகியோர்கள் எனது சாதியை சேர்ந்வர்கள் மற்றும் எனது உறவினர் என்றால் சரிதான். நான் 8-ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எங்கள் ஊரில் என்னை அடியாள் (எ) தியாராஜன் என்று புனைப்பெயர் இட்டு அழைப்பார்கள் என்றால் சரிதான். குடவாசல் காவல் நிலையத்தில் என்மீது வழக்குகள் உள்ளது என்றால் இல்லை. H.S.No.531/2014 எனக்கு உரிய பட்டியல் ரவுடி எண் என்று சொன்னால் சரியல்ல. சாட்சி திருமாறன் என்பவர் பெயரில் குற்றவழக்குகள் உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. எதிரி செந்தில்குமார் காலவாயில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நாளுக்கு இரண்டு வருடம் முன்பாக வேலை செய்தேனா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தனியார் பழனிக்கு சொந்தமான தரிசு நிலம் என்றால் சரிதான். பழனியை இந்த வழக்கில் சாட்சியாக போலீசார்கள் விசாரித்தார்களா என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. திருவிடைச்சேரியில் இருந்து பழனி தரிசு நிலம் 1/2 கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என்றால் சரிதான். சாதரணமாக காலவாய்க்கு கல் அறுப்பதற்கு முன் முன்தொகை பெறுவோம் என்றால் சரிதான். நான் கல் அறுப்பதற்காக பெற்ற ரூ.75,000/- கணக்கு கொடுத்து விட்டனே என்றால் நான் முன் பணம் எதுவும் ஒரு ரூபாய் கூட பெறவில்லை. 35,000 கல் அறுத்துள்ளேன். எனக்கு எவ்வளவு பணம் வரவேண்டும் என்ற கணக்கு வழக்குகளை போலீசாரிடம் கொடுத்துள்ளேனா என்றால் என்னிடம் எந்த ஆவணமும் இல்லை அதனால் போலீசாரிடம் எந்த ஆவணமும் கொடுக்கவில்லை. 35,000 கல் அறுத்த விபரத்தை போலீசாரிடம் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். முதல்விசாரணையில் தற்போது சிரமமாக உள்ள காரணத்தினால் சிரமமாக உள்ளது என்று கூறி பணம் கடன் கேட்டேன் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில்

குறிப்பிட்டுள்ளேனா என்றால் குறிப்பிட்டுள்ளேன். அதுபோல் போலீஸ் விசாரணையில் 19.05.2023 ஆம் தேதி காலையில் இருந்தே பணம்கேட்டுக்கொண்டிருந்தேன் என்ற விபரத்தை சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். அதுபோல் 19.05.2023 ஆம் தேதி மாலை 5.30 மணிக்கு காளவாய் கொல்லைக்கு போனேன் என்று முதல் விசாரணையில் சொல்லியுள்ளது போல் போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன். புகாரை நான் காவல் நிலையத்தில் வைத்து சம்பவம் நடந்ததாக சொல்லக்கூடிய 19.05.2023 ஆம் தேதி அன்றே எழுதிகொடுத்து விட்டேன். 19.05.2023 மாலை 6.00 மணிக்கு புகார் கொடுத்தேன். புகார் கொடுத்த உடனே கோபு என்கிற போலீசார் சம்பவ நடந்ததாக சொல்லக்கூடிய இடத்திற்கு வந்து விசாரித்து வாக்குமூலம் பெற்று கையெழுத்து வாங்கிகொண்டார். அசா.ஆ-1 ஆன புகாரில் இறுதி பகுதியில் எழுத்துக்கள் மிகவும் நெருக்கமாக எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த புகாரை பெற்று விசாரித்த போலீஸ் யார் என்று தெரியாது. அதன் பிறகு 19.05.2023 ஆம் நாளுக்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை. அ.சா.ஆ-1 ஆன புகாரை நான் தான் எழுதினேன் அதில் எதிரியின் உடைய காரின் உடைய பதிவு எண்ணையோ அல்லது அதன் நிறத்தையோ குறிப்பிடவில்லை என்று சொன்னால் ஆமாம். சம்பவ நடந்ததாக சொல்லும் இடத்திற்கு இருசக்கர வாகனத்தில் மணி என்பவர் வந்ததாக நான் முதல் விசாரணையில் கூறியுள்ளேன். அவருடை இருசக்கர வாகனத்தை பற்றி எந்த விபரமும் குறிப்பிடவில்லை என்று சொன்னால் ஆமாம். அதுபோல் மணி அன்றைய தினமே கோபு என்ற போலீசார் விசாரித்தாரா என்றால் விசாரிக்கவில்லை. நான் விடுதலை சிறுத்தை கட்சியில் என்ன பொறுப்பில் உள்ளேன் என்றால் நான் எந்த பொறுப்பிலும் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் விபரத்தை நான் திருமாறனிடம் சொன்னேன். நானும் திருமாறனும் போலீசாரிடம் புகார் கொடுத்தோம். நான் ஊருக்குள் ஓடிய போது 20,30 நபர்கள் இருந்தார்கள். அ.சா.ஆ-1 ஆன புகாரை ஒரளவுக்கு தான் படிக்க முடியும் என்றால் சரிதான். அ.சா.ஆ-1 ஆன புகாரில் காவல் நிலையத்தில் வைத்து போலீசார் சொன்னதன் அடிப்படையில் நான் கையெழுத்து போட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான். எதிரியிடம் முன்பணமாக ரூ.75,000/-

பெற்றேன் என்று அந்ததொகைக்கு உரிய கல்லை நான் அறுத்து கொடுக்காமால் வேறு வேலைக்கு சென்றுவிட்டேன்என்றும், மேற்படி முன்பணத்தை கொடுக்காமால் தப்பிக்கவேண்டும் என்ற எண்ணத்தில் எதிரிக்கு எதிராக பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை அதனால் தான் வாகனங்கள் பற்றிய விபரங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை. நான் 100 நாள் வேலை பார்த்து வருகிறேன் என்றால் சரிதான். இந்நிலையில் வேலை இல்லை என்று பணம் கேட்டதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னதாக எந்தவிதமான சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன விதத்தில் இடம், நாள், நேரம் எந்த விதமான புகாரும் கொடுக்கப்படவில்லை என்றால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த
நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின்
சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது
சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

ஒம்/- M. வடிவேல்., (11.08.2025)
அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.

**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 11.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 11/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-2 |
| **சாட்சியின் பெயர்** | : | திருமாறன் |
| **தந்தை பெயர்** | : | கண்ணையன் |
| **கிராமம்** | : | தெற்கு தெரு, நெடுஞ்சேரி |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 52 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன். ஆஜர் எதிரி பிள்ளை சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். அசா-1 தியாகராஜன்

என்பவரை தெரியும். 19.05.2023 ஆம் தேதி அன்று சுமார் 5.30 மணியளவில் அசா-1 தியாகராஜன் என்பவர் எதிரி செந்தில்குமார் என்பவரிடம் கல் அறுத்தது சம்மந்தமாக கணக்கு பார்க்க வேண்டும் என்று என்னை அழைத்துகொண்டு செந்திலுக்கு சொந்தமான நாரணமங்கலம் கிராமத்தில் உள்ள காளவாய்க்கு சென்றேன். அங்கு செந்தில், பெரும்பண்ணையூர் மணி என்பவரும் காளவாய்க்கு எதிரில் நின்று கொண்டிருந்தார்கள். செந்திலுக்கு சொந்தமான கார் அங்கு நின்று கொண்டிருந்தது. கார் கதவை திறந்து காரில் இருந்து ஒரு வீச்சு அருவாளை எடுத்து கார் பேனட் மேலே அருவாளை போட்டுவிட்டு பக்கத்தில் இருந்த பெரும்பண்ணையூர் மணியை பார்த்து இந்த அருவாளை தீட்டுடா ஒருதன் கழுத்தை அறுக்க வேண்டும் என்று கூறிவிட்டு செந்தில்குமார் கையில் இருந்த காளவாய் கொல்லை சாவியை தியாகராஜனிடம் கொடுத்து காளவாயை திறடா என்றார். அவர் வாங்க மறுத்துவிட்டு எனது கணக்கை பாருங்கள் என்றார். உடனே அவர் தியாகராஜனை பார்த்து என்னடா பற குச்சிகாரி மவனே, தேவடியா மவனே என்று பேனட்டில் மேல் வைத்திருந்த வீச்சு அருவாளை எடுத்து வெட்டுவதற்கு கழுத்து பக்கம் வீசினார். தியாகராஜன் தடுமாறி கீழே விழுந்துவிட்டார். செந்தில்குமார் அவரை பார்த்து செத்த மாடு திங்கிற பற குச்சிகாரி மவனே என்னை வழி மறித்து கணக்கு பார்க்க சொல்றியா என்று சொல்லிவிட்டு, மீண்டும் அவரை வெட்டுவதற்கு அருவாளை ஓங்கினார். அசா-1 தியாகராஜன் பக்கத்தில் உள்ள அவரது தெருவிற்கு ஓடிவிட்டார். அதன் பின்னர் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை அழைத்து விசாரணை செய்தார். அங்கு நடந்த சம்பவத்தை நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் வாக்குமூலமாக கொடுத்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

அசா-1 தியாகராஜன் எனது உறவினர் மற்றும் சாதிகாரர் ஆவார். எதிரியின் பெரியப்பா குடும்பத்திற்கும் எதிரிக்கும் சொத்து பிரச்சனை

இருந்தது. அந்த பஞ்சாயத்தில் நானும் கலந்து கொண்டேன். பஞ்சாயத்தில் நீங்களும் உங்களது தரப்பு ஆட்களும் மேற்படி பஞ்சாயத்தில் சொன்னதை எதிரி ஏற்று கொள்ளாமல் சென்றுவிட்டார். அதில் இருந்து எனக்கும் எதிரிக்கும் வருத்தம் உள்ளது என்றும் இந்நிலையில் அசா-1 தியாகராஜன் கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக அசா-1 கேட்டு கொண்டதற்கு இணங்க எதிரிக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே என் மீது எத்தனை குற்ற வழக்குகள் இருந்தது என்றால் 3 குற்ற வழக்குகள் இருந்தது. திருவாரூர் சார்பு நீதிமன்றத்தில் உள்ள SC No.76/2017 நான் குற்றவாளி என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கு அசா-1 என்னை அழைத்து சென்றார் என்று முதல் விசாரணையில் சொன்ன விவரத்தை போலீஸ் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். நான் சம்பவம் சம்மந்தமாக போலீசாரிடம் புகார் கொடுத்தேனா என்றால் நான் கொடுக்கவில்லை தியாகராஜன் கொடுக்கும் போது நான் உடன் சென்றிருந்தேன். தியாகராஜன் நடந்த சம்பவத்தை சொல்ல நான் புகார் எழுதி கொடுத்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லகூடிய மறு நாளே போலீசார் என்னை விசாரித்தார்கள் அதன் பின்னர் என்னை போலீசார் விசாரிக்கவில்லை. பழனியின் உடைய கொல்லை நாரணமங்கலத்தில் இருந்து 50 மீட்டர் தொலைவில் உள்ளது. மணியை போலீசார் விசாரித்த விவரம் எனக்கு தெரியாது. காரை பற்றிய விபரங்களை போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன். அ.சா-1 தியாகராஜன் காளவாய்க்கு சென்ற நேரம் குறித்து முதல் விசாரணையில் சொல்லியுள்ள விபரத்தை போலீஸ் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சொல்லியுள்ளேன். கணக்கு நோட்டை அசா-1 தியாகராஜன் ஒப்படைத்தாரா என்ற விபரம் எனக்கு தெரியாது. முதல் விசாரணையில் செந்தில்குமார் காளவாயில் நின்று கொண்டிருந்ததாக சொல்லும் காரின் பதிவு எண் என்ன என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான்.

முதல் விசாரணையில் தாங்கள் கூறியது போல் வழக்கு சம்பவத்திற்கும் எதிரிக்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடத்தில் நாங்கள் இல்லை என்றாலும் சரியல்ல. அதனால்தான் கார் பற்றிய விவரங்களை குறிப்பிட்டு சொல்லமுடியவில்லை என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த
நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின்
சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது
சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

ஒம்/- M. வடிவேல்., (11.08.2025)
அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.

**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 11.08.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 11/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-3 |
| **சாட்சியின் பெயர்** | : | சுஜைய்காந்த் |
| **தந்தை பெயர்** | : | கோவிந்தராஜ் |
| **கிராமம்** | : | நாரணமங்கலம் |
| **தாலுக்கா** | : | குடவாசல் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 45 |

2025 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 11 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

எதிரி ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரி வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவன். ஆஜர் எதிரி பிள்ளை சமூகத்தை சேர்ந்தவர் ஆவார். அசா-1 தியாகராஜன்,

அசா-2 திருமாறன் ஆகியோர்களை எனக்கு தெரியும். அசா-1க்கும் எதிரிக்கும் என்ன பிரச்சனை நடந்தது என்று தெரியும் என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது. சம்பவம் பற்றி அசா-1 கூறி தான் எனக்கு தெரியும். போலீசார் என்னை விசாரித்தார்கள். அப்போது தற்போது கூறியது போல் தான் நான் கூறினேன்.

(இந்த சாட்சி அரசு தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதால் இந்த சாட்சி குறுக்கு விசாரணையில் கேள்விகள் கேட்பது போல் இந்த சாட்சியிடம் கேள்விகள் கேட்க அனுமதிக்கவேண்டுமென அரசு தரப்பு வழக்கறிஞர் வாய்மொழியாக கேட்டுகொண்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்படுகிறது.)

அரசு தரப்பு தொடர் விசாரணை

கடந்த 19.05.2023 ஆம் தேதி அன்று சுமார் 5.30 மணியளவில் அசா-1 தியாகராஜன் என்பவர் எதிரி செந்தில்குமார் என்பவரிடம் கல் அறுத்தது சம்மந்தமாக கணக்கு பார்க்க வேண்டும் என்று என்னை அழைத்துதாகவும் அதன் பேரில் செந்திலுக்கு சொந்தமான நாரணமங்கலம் கிராமத்தில் உள்ள காளவாய்க்கு சென்றேன் என்றும், அங்கு செந்தில், பெரும்பண்ணையூர் மணி என்பவரும் காளவாய்க்கு எதிரில் நின்று கொண்டிருந்தார்கள் என்றும், செந்திலுக்கு சொந்தமான கார் அங்கு நின்று கொண்டிருந்தது. என்றும், கார் கதவை திறந்து காரில் இருந்து ஒரு வீச்சு அருவாளை எடுத்து கார் பேனட் மேலே அருவாளை போட்டுவிட்டு பக்கத்தில் இருந்த பெரும்பண்ணையூர் மணியை பார்த்து இந்த அருவாளை தீட்டுடா ஒருதன் கழுத்தை அறுக்க வேண்டும் என்று கூறிவிட்டு செந்தில்குமார் கையில் இருந்த காளவாய் கொல்லை சாவியை தியாகராஜனிடம் கொடுத்து காளவாயை திறடா என கூறினார் என்றார் என்றும், அவர் வாங்க மறுத்துவிட்டு எனது கணக்கை பாருங்கள் என்றார் என்றும், உடனே அவர் தியாகராஜனை பார்த்து என்னடா பற குச்சிகாரி மவனே, தேவடியா மவனே என்று பேனட்டில் மேல் வைத்திருந்த வீச்சு

அருவாளை எடுத்து வெட்டுவதற்கு கழுத்து பக்கம் வீசினார். தியாகராஜன் தடுமாறி கீழே விழுந்துவிட்டார என்றும், செந்தில்குமார் அவரை பார்த்து செத்த மாடு திங்கிற பற குச்சிகாரி மவனே என்னை வழி மறித்து கணக்கு பார்க்க சொல்றியா என்று சொல்லிவிட்டு, மீண்டும் அவரை வெட்டுவதற்கு அருவாளை ஓங்கினார் என்றும், அசா-1 தியாகராஜன் பக்கத்தில் உள்ள அவரது தெருவிற்கு ஓடிவிட்டார் என்றும், அதன் பின்னர் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை அழைத்து விசாரணை செய்த போது மேற்படி சம்பவம் உண்மையில் நடந்தது எனவும் அதை பார்த்ததாகவும் நன்னிலம் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களிடம் வாக்குமூலமாக கொடுத்தேன் என்றும் சொன்னால் சரியல்ல. எதிரியை காப்பாற்றும் நோக்கோடு உண்மை சம்பவத்தை மறைத்து உண்மைக்கு மாறாக நீதிமன்றத்தில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

ஒம்/- M. வடிவேல்., (11.08.2025)
அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.